## 7.11 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள 5850 கி.மீ நீளமுள்ள சாலைகளை, ரூ.300 கோடி மதிப்பீட்டில் சீரமைத்தல்

---

ஊரக வளர்ச்சி (தி1) துறை

அரசாணை (நிலை) எண் 10 நாள் : 14.01.2004

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண் 49623/2004/டியு2 நாள் 08.01.2004

**ஆணை**

ஊரக வளர்ச்சி இயக்குநர் மேலே படிக்கப்பட்டுள்ள தன்னுடைய கடிதத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொறுப்பில் 86559.94 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளன என்றும் அவற்றில் 11,171 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். அவற்றில் 1538.69 கிலோ மீட்டர் சாலைகள் வகைப்படுத்தப்படாத சாலைகள் ஆகும். இந்த வகைப்படுத்தப்படாத சாலைகளின், மேம்பாட்டிற்காக இந்த நிதி ஆண்டில் தனியாக ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 9632.31 கிலோ மீட்டர் சாலைகள் உடனடியாக மேம்பாடு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இந்தப் பணியை வரும் 3 ஆண்டுகளுக்குள் செய்து முடிக்க ரூ.500 கோடி தேவைப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். முதற்கட்டமாக நடப்பு ஆண்டில் 5850 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை ரூ.300 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க அனுமதி அளித்து, முன்னுரிமை அடிப்படையில் 5850 கிலோ மீட்டர் சாலைப் பணிகளை மேற்கொள்ள உடனடியாக ரூ.150 கோடி நிதியும் ஏப்ரல் 2004க்குள் மீதமுள்ள ரூ.150 கோடி நிதியும் வழங்குமாறும் அரசினை கேட்டுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாகப் பரிசிலனை செய்தது. இதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்ட வாரியாக தெரிவிக்கப்பட்டுள்ள 5850 கி.மீ நீளமுள்ள சாலைகளை, ரூ.300 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க ஏதுவாக நடப்பு ஆண்டில் ரூ.50 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்) அரசு மானியமாகவும், ரூ.100 கோடி (ரூபாய் 100 கோடி மட்டும்) நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்கும் வழிவகை செய்தும் ஆணையிடப்படுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஆணையிட்டுள்ள ரூ.50 கோடி மானியத்தை கீழ்கண்ட புதுக்கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்குமாறும், இந்தத் தொகையைப் பெற்றுக் கொண்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கவும், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

2515–00–ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800 – ஏனைய செலவு – பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநில திட்டம் – KF வகைப்படுத்தப்படாத ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை பராமரிப்பதற்கு மானியங்கள் – 09 உதவி மானியங்கள் / 02 மூலதன செலவுக்கான மானியங்கள் (த.தொ.கு.2515–00–800– KF –0928)

4. இந்தத் தொகையான ரூ.50 கோடியானது மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து மறுநிதியொதுக்கம் மூலம் அளிக்கப்படும். மேலும் ரூ.100 கோடியை (ரூபாய் நூறு கோடி மட்டும்) பிறநிதி நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டிக்கு கடனாகப் பெறுவதற்கு உடனடியாக தேவையான நடவடிக்கையினை மேற்கொண்டு, அரசுக்கு தகுந்த செயற்குறிப்பினை அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

5. 2004–2005 ஏப்ரல் மாதத்திலிருந்து மேலே பத்தி 2ல் தெரிவித்துள்ளபடி மேலும் ரூபாய் 150 கோடி பெறுவதற்கு (ரூபாய் 50 கோடி மானியம், ரூபாய் நூறு கோடி கடன்) தனியாக செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பி வைக்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

6. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்ற ஒப்புதல் பின்னர் பெறப்படும். ஆரம்பத்தில் இச்செலவினம் மாநில அரசின் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்குநர் இதற்கான தக்க விண்ணப்ப படிவத்தினை எதிர்பாரா நிதியத்திலிருந்து ஒப்பளிப்பு வேண்டி நிதி (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 14/SS(LK)/04 நாள் 14.01.2004 மற்றும் கூடுதல் நிதி ஒப்பளிப்பு பேரேடு எண் 1.010 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்